பாதுகாத்து, வழிநடத்தி, அவர்களுடைய துயர் துடைக்கின்ற அரசாக விளங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–55

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) கீழ்வேளூர் தொகுதி, குடிநீர்ப் பிரச்சினை தீர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மதிவாணன், என்ன சொல்லுங்கள்.

திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் சட்டப்பேரவைத் தொகுதியில், கீழையூர், தலைஞாயிறு ஒன்றியங்களிலுள்ள கிராமங்களில், நிலத்தடி நீர் முழுவதுமாக உப்பு நீராக மாறிவிட்டது. கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து வரக்கூடிய 20 எம்.எல்.டி. நீரில், 6 எம்.எல்.டி. நீர்தான் ஒரு நாளைக்கு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஒரே வார்த்தையில் சொல்கிறேன் என்று சொன்னீர்கள். நீங்கள் விளக்கமாகப் பேசுகின்றீர்கள். நான் இவ்வளவு தூரம் அனுமதித்தும் நீங்கள் இப்படிச் செய்கின்றீர்களே?

திரு. உ. மதிவாணன்: ஒரே வார்த்தையில் சொல்லிவிடுகிறேன். **மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக டாங்கர் லாரிகளில் தண்ணீர் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அரசை வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) கீழ்வேளூர் தொகுதி, குடிநீர்ப் பிரச்சினை தீர்த்தல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் ஏதோ சொல்ல வேண்டுமென்று விரும்புகிறார். சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இங்கே பேசுகிறபோது, கீழையூர் மற்றும் தலைஞாயிறு பகுதிகளில் ** என்று சொன்னார். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர், நீங்கள் உட்காருங்கள். அதாவது மாண்புமிகு உறுப்பினர் திரு. மதிவாணன் அவர்கள் பேசுகிறபோது. . . (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. மதிவாணன் அவர்கள் பேசும்போது ** என்று பேசினார். ஆதாரம் இல்லாமல் பேசியதை. . .(குறுக்கீடுகள்) இல்லை, ஆதாரம் எல்லாம் ஒன்றும் இல்லை. ஆதாரம் இல்லாமல் பேசிய அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

(அ) சட்டமன்ற உறுப்பினர்கள் பற்றி ஆங்கிலத் தொலைக்காட்சி செய்தி—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒன்றும் இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)*

***திரு. துரைமுருகன்:** *ஆதாரம் இருக்கிறது. ஆதாரத்தைக் கொடுத்தால். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள். அதைத்தான் என்னுடைய அறையில் பேசலாம் என்று சொல்கிறேன் இல்லையா? அதைத் திரும்பவும் பதிவு செய்யாதீர்கள். (குறுக்கீடு) நான்தான் என்னுடைய அறையில் வந்து கொடுங்கள், நான் வாங்கிக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டேன் இல்லையா? நீங்கள் உட்காருங்கள்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*